# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள ஹதீக்கத்துல் மஹ்தி ஜல்ஸா திடலில் 07.09.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று இறைவனின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இங்கிலாந்து ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. வழக்கப்படி மாநாடு மாலை ஆரம்பமாகும். இதன் துவக்க நிகழ்ச்சி அப்போது இருக்கும் என்றாலும், உண்மையில் இந்த ஜுமுஆவும் மாநாட்டின் ஒரு பகுதியாகும். இதுவே தொடக்கமாக இருக்கிறது. இந்த வகையில் நான் சில விசயங்களைக் கூறுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டை ஏற்படுத்தியதன் நோக்கமாக இதைக் கூறியுள்ளார்கள். இறை ஞானத்தில் முன்னேறுகின்ற ஒரு ஜமாஅத் உருவாக வேண்டும். தூய்மையும் தக்வாவும் அவர்களிடம் ஏற்பட வேண்டும். இறைவனுக்கு அஞ்சுகின்ற பழக்கம் அவர்களில் உருவாக வேண்டும். அவர்களிடையே பரஸ்பரம் அன்பும் நேசமும் ஏற்பட வேண்டும். மென்மையான உள்ளம் உடையவர்களாக இருப்பது, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவது ஆகியவற்றில் உயர்வான தரத்தைப் பெற்றுக் கொண்டவர்களாகத் திகழ வேண்டும். சகோதரத்துவத்தின் உதாரணமாகத் திகழ்ந்து ருஹமாஉ பய்னஹும் அதாவது ஒருவருக்கொருவர் கருணையுடன் நடந்து கொள்வதன் முன்மாதிரியாகத் திகழ வேண்டும். பணிவும் தாழ்மை குணமும் அவர்களது நடைமுறையாக இருக்க வேண்டும். உண்மையின் தரம் மிக உயர்ந்ததாக இருக்க வேண்டும். இதற்கு யாரும் ஈடில்லை என்று சொல்லும் அளவுக்கு உயர்வாக இருக்க வேண்டும். இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் மூலைகளில் எட்ட வைப்பதற்கு அவர்களது உள்ளங்களில் ஒரு துடிப்பு இருக்க வேண்டும். அதற்காக உயிர், பொருள், நேரம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றை தியாகம் செய்ய எல்லா நேரமும் தயாராக இருக்க வேண்டும்.

இன்று இங்கு கூடியிருக்கின்ற நம்மில் ஒவ்வொருவரும் இதை ஆய்வு செய்து பார்க்க வேண்டியது அவசியமாகும். பயணத்தின் சிரமத்தை சகித்தவாறு இங்கு நாம் ஒன்றுகூடியிருக்கின்றோம். சந்தேகமின்றி இந்தக் காலத்தில் பயணம் செய்வதற்கான வசதிகள் உள்ளன என்பது உண்மைதான். ஆனால் பயணம் செய்பவர்களின் இயல்பும் மாறியிருக்கின்றது. அதன் காரணமாக வழியில் ஏற்படுகின்ற சிரமங்கள், பயணத்தால் ஏற்படும் சிரமங்கள் நமக்கு இவற்றை உணர வைக்கின்றது. பயணத்தில் ஏற்படுகின்ற சிரமங்களின் தன்மைகள் மாறியுள்ளன. எவ்வாறிருப்பினும், பயணம் பயணம்தான். எனவே, எவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளார்களோ அவர்கள் இந்த விசயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பங்களுக்கு கண்ணியமளித்தவாறு மாநாட்டின் இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுகின்றோமா? மாநாட்டு நிகழ்ச்சிகளும், இந்த மூன்று நாட்களில் மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் இந்த விசயங்களை கண்முன் நிறுத்தி செயல்படுவார்களா? என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் நான் மாநாட்டில் கலந்து கொள்வதன் நோக்கம் என்ன என்பதன் பக்கம் நமக்கு கவனம் ஏற்படும். அப்போதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்க விரும்புகின்ற அந்த ஜமாஅத் உருவாக முடியும். அப்போதுதான் உலகில் ஒரு ஆன்மீக புரட்சியைக் கொண்டு வருவதற்கு காரணமாக இருக்கின்ற அந்தப் புரட்சி நமது இயல்பில் உருவாகும். இந்த திசையில் நாம் நமது எண்ணங்களையும் செயல்களையும் கொண்டு செல்லவில்லை என்றால் நாம் மாநாட்டில் கலந்து கொள்வது பயனற்றதாகவும் குறிக்கோளற்றதாகவும் ஆகிவிடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இது உலகத் திருவிழா அல்ல.

இதில் நாம் வந்தோம்; அமர்ந்தோம்; நண்பர்களுடன் மகிழ்ச்சியுடன் உரையாடுவதில் கொஞ்சம் நேரத்தை கழித்தோம்; பஸாரில் சென்று ஃபாலுடா மற்றும் பக்கோடா சாப்பிட்டோம்; ஜூஸ் மற்றும் காஃபி குடித்தோம் அல்லது பாகிஸ்தானைச் சேர்ந்த அல்லது இந்தியாவைச் சேர்ந்த பொருள்களை வாங்கினோம்; ஏனென்றால் இந்த எல்லா

பொருள்களும் மாநாட்டு நாட்களில் ஒரே இடத்தில் கிடைத்து விடும். எனவே இதிலிருந்து பலன் பெற வேண்டும் என்கின்றனர். நாங்கள் ஒரு வருடத்திற்கு தேவையான ரேசன் பொருட்களான பருப்பு, அரிசி போன்றவற்றை வாங்கிக் கொள்வோம். ஏனென்றால் இந்தப் பொருட்கள் இங்கு மற்ற இடங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் தரம் வாய்ந்ததாகவும் மலிவாகவும் கிடைக்கின்றன. அதிகமாக பேரம் பேச வேண்டிய தேவையும் இருக்கவில்லை என்றும் சிலர் கூறுகின்றனர். இது நோக்கமாக இருந்தால் பிறகு நீங்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கிடைக்கின்ற நற்கூலியை வீணாக்கி விட்டீர்கள் என்றே இதற்கு பொருள். இந்தப் பொருட்கள் சற்று அதிகமான விலையில் அல்லது குறைவான விலையில் பஸாரில் கிடைத்து விடுகிறது. இங்கு வருபவர்கள் இந்த உலக உணவுத்தட்டை பெறுவதற்காக வரவில்லை. அவ்வாறு வரவும் கூடாது. மாறாக வேறு எந்த பஸாரிலும் கிடைக்காத அந்த ஆன்மீக உணவுத்தட்டை பெறுவதற்காகவே அவர்கள் இங்கு வருகின்றார்கள். அவ்வாறு வரவும் வேண்டும். அது இன்று ஒரு விலைமதிப்புள்ள பொக்கிஷமாக இருக்கின்றது. இது ஆன்மீக பசி மற்றும் தாகத்தை மட்டும் தணிப்பதில்லை. மாறாக உண்மையான முறையில் இதிலிருந்தும் அருளைப் பெறுகின்ற ஒவ்வொரு நபரையும், அவர் ஏழையாக இருந்தால் அது அவரை மிகப்பெரும் செல்வந்தராக ஆக்கி விடுகின்றது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய இந்தக் கருவூலம் உள்ளது. மாநாட்டின் பல்வேறு நிகழ்ச்சிகளின் போது இது பங்கிட்டு வழங்கப்படுகிறது. ஒரு உண்மையான அஹ்மதி இவற்றைப் பெற்றுக் கொண்ட பிறகு அது மற்றவர்களது பசியையும் தாகத்தையும் போக்குவதற்கு காரணமாக இருக்கின்றது. ஒவ்வொரு அஹ்மதியும் மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அவர்களது சிந்தனைகளில் ஏதாவது குறை இருந்திருந்தால் – மாநாடு தொடர்பான உண்மையான அறிவு அவர்களுக்கு இல்லாமல் இருந்திருந்தால் இப்போது அவர்கள் தங்கள் சிந்தனைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பத்திற்கேற்ப வடிவமைத்துக் கொண்டு மாநாட்டிலிருந்தும் முழுமையாகப் பயன் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் மற்றும் ஜமாஅத் தொடர்பாக அவர்களது விருப்பங்கள் என்ன என்பது பற்றி கூறுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எத்தகைய அஹ்மதியாக இருக்க வேண்டும் என விரும்புகின்றார்கள் என்பது தெரிந்து விடும். ஜமாஅத்தின் தரம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என அவர்கள் விரும்புகின்றார்கள் என்பதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனைகளிலிருந்தும் கூறுவேன். அவர்களது அதே சொற்களில் கூறாவிட்டாலும் சுருக்கமாக அவர்கள் கூறியதை எடுத்துரைப்பேன். மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக அந்த போதனையை அவர்கள் கூறியுள்ளார்கள். எப்படிப்பட்ட செயல் திட்டத்தை அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்றால் மனித வாழ்க்கையில் அவனது இம்மையையும் மறுமையையும் சரிசெய்வதற்கு அது ஒரு உத்திரவாதமாகத் திகழ்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இன்னல்லாஹா மஅல்லஸீ னத்தக்கவ் வல்லஸீனஹும் முஹ்ஸினூன் – எவர்கள் தக்வாவை மேற்கொண்டுள்ளார்களோ அவர்களுடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கின்றான். அவர்கள் நன்மைகளை செய்பவர்களாக இருப்பார்கள் என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: தக்வா இல்லாமல் எந்தவொரு விசயத்தாலும் இறைவன் திருப்தி அடைவதில்லை.

எனவே, ஒரு நம்பிக்கையாளரின் நோக்கம் இறைவனை திருப்திபடுத்துவதுதான். அவ்வாறிருக்கும் போது தக்வாவின்படி செயல்படுவதைத் தவிர அவருக்கு வேறு எந்த வழியும் இல்லை. தக்வா என்றால் என்ன? எந்தெந்த வழிகளில் சென்று மனிதன் தக்வாவைப் பெற முடியும்? ஓர் அஹ்மதி முஸ்லிம் தக்வாவை மேற்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? இது ஏன் அவசியமானது?

**இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஜமாஅத்திலுள்ள நபர்கள் தக்வாவை கடைபிடிப்பது ஏன் அவசியம் என்றால், அவர்கள் எத்தகைய நபருடன் தொடர்பு வைத்து அவரது பைஅத்தில் இணைந்துள்ளனர் என்றால், அந்த நபர்தான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன் என வாதம் செய்கின்றார். இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவரது பைஅத்தில்

இணைவதன் பலன் இதில் இணைகின்ற ஒவ்வொரு நபரும் இதற்கு முன்னர் உலகை சார்ந்தவர்களாக அதிலேயே மூழ்கியிருந்தனர் என்றால், அவ்வாறே அவர்கள் எல்லாவிதமான தீமைகளிலும் மூழ்கியிருந்தனர் என்றால் அப்படிப்பட்ட எல்லா தீமைகளிலிருந்தும் அவர்கள் இரட்சிப்பை பெற வேண்டும். தீமைகளிலிருந்து விடுபடுவது தக்வா இல்லாமல் ஏற்படாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு உதாரணம் கூறி இவ்வாறு விளக்குகின்றார்கள். ஒருவர் நோயாளி ஆகிவிட்டால் அந்த நோய் சிறியதாக இருந்தாலும் அல்லது பெரியதாக இருந்தாலும் அதற்குரிய சிகிச்சை வழங்கப்படாமல் இருந்தால் அந்த நோய் சரியாகாது. சில நேரங்களில் அந்த சிகிச்சை துன்பத்தை தரக்கூடியதாக இருக்கும். ஆனால் அதை செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஏனென்றால் சிகிச்சை செய்யாவிட்டால் துன்பம் அதிகமாகி விடும்; ஆரோக்கியம் கிடைக்காது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உதாரணமாக, ஒருவரது முக்கத்தில் ஒரு கரும்புள்ளி உருவாகி விட்டால், அவருக்கு இந்த கரும்புள்ளி பெரிதாகி முழு முகத்தையும் கருப்பாக்கி விடக்கூடாதே என்ற கவலை அவருக்கு ஏற்படும். பலமுறை இவ்வாறு நிகழ்ந்துள்ளது. என்னிடத்தில் இப்படிப்பட்ட பல மக்களும் வந்துள்ளனர். இந்தப் புள்ளி பெரிதாகி விட்டால் அவர்களுக்கு இதனால் பெரும் கவலை ஏற்படுகின்றது. இவ்வாறே நீங்கள் எந்தவொரு சிறிய தீமையையும் சாதாரணமாக கருதாதீர்கள். இது தக்வாவை விட்டும் நம்மை விலக்கி மிகத் தொலைவில் நம்மை கொண்டு சென்றுவிடும். பிறகு இந்த சிறிய தீமை பெரிய பாவமாக ஆகிவிடுகின்றது. அது உள்ளத்தை கருப்பாக்கி விடுகின்றது. எனவே கவலைப்படுங்கள். அதிகமாக கவலைப்படுங்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் எந்த அளவு கருணை காட்டுபவனாகவும் பரிவுடன் நடந்து கொள்பவனாகவும் இருக்கின்றானோ அந்த அளவு கடுமையாக தண்டிக்கக் கூடியவனாகவும் தண்டனை அளிக்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். ஒரு ஜமாஅத்தை அவன் பார்க்கின்றான். அவர்களது வாய்பேச்சுக்களும் வாதங்களும் மட்டும் அதிகமாக இருக்கின்றது. அவர்களது செயல்களின் நிலைமை அதற்கேற்ப இல்லை என்றால் அவர்கள் மீது அவனது கோபமும் வெறுப்பும் அதிகமாகி விடுகின்றது. எனவே தங்களது செயல்களின் நிலைமைகளை சீர்திருத்திக் கொள்ள ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும்.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த மிகப்பெரும் எச்சரிக்கையாகும். இந்த நாட்களில் அதிகமாக துஆ செய்யுங்கள். துஆவிற்கான சந்தர்ப்பத்தையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். அல்லாஹ் உண்மையில், அவனை விரும்புகின்றவர்களாக நம்மை ஆக்குவானாக!

இன்று நாம் முஸ்லிம்களின் நிலைமையைப் பார்க்கின்றோம். அதைப் பார்க்கும் போது இன்னும் அதிகமாக அச்சம் ஏற்படுகின்றது. நமது ஏதாவதொரு தகுதியற்ற நிலை மற்றும் தீய செயலால் வெறுப்படைந்தவாறு அல்லாஹ் நம்மை தனது கோபத்தின்கீழ் கொண்டு வந்து விடக்கூடாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உதாரணம் கூறியுள்ளார்கள். எப்போது தீய செயல்களை நாம் செய்ய ஆரம்பிக்கின்றோமோ, சொல்லிலும் செயலிலும் முரண்பாடு ஏற்படுகின்றதோ அப்போது இறைவன் மூஃமின்கள் என தங்களை கூறிக் கொள்பவர்களுக்கு காஃபிர்கள் மூலம் தண்டனை வழங்குகின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: வரலாறு இதற்கு சாட்சி பகர்கின்றது. பலமுறை முஸ்லிம்கள் காஃபிர்களால் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளனர். செங்கிஸ்கான் மற்றும் ஹலாக்குகான் போன்றவர்கள் முஸ்லிம்களை அழித்தனர். ஆனால் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு ஆதரவு அளித்து அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்குறுதி அளித்திருந்தான்.

அவர்கள் கூறினார்கள்: இதன் காரணம் அவர்களது நாவுகள் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுகின்றன. ஆனால் உள்ளம் வேறொரு பக்கம் இருக்கின்றது. செயலளவில் அவர்கள் உலகில் மூழ்கியவர்களாக இருக்கின்றனர்.

இது நாம் அச்சப்பட வேண்டிய இடமாகும். ஒவ்வொரு சமயத்திலும் நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ் நம்மீது அருள் செய்தவாறு இந்தக் காலத்தின் வழிகாட்டியான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை இக்காலத்திலுள்ள மக்களை சீர்திருத்துவதற்காக அனுப்பி வைத்தான். பிறகு நம்மீது மேலும் அருள் செய்தவாறு இந்தக் காலத்தில் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவரை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கினான். நாம் நமது கவனத்தை இறைவன் பக்கம் வைக்காமல் இருந்தால் நாமும் இந்த இயற்கைச் சட்டத்தின் ஆட்டுரலில் அரைக்கக்பட்டு விடக்கூடாது. இறைவன் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக! இந்த இயற்கைச் சட்டம் தமது சொல்லிலும் செயலிலும் முரண்பட்டிருப்பவர்கள் மீது செயல்படுகின்றது.

அவர்கள் கூறினார்கள்: இதனை நீங்களே ஆய்வு செய்து பாருங்கள். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் எந்த அளவு உங்களிடம் இருக்கின்றது? உங்களது சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று எந்த அளவு ஒத்திருக்கின்றது என்று பாருங்கள். உங்களது சொல்லும் செயலும் ஒத்த நிலையில் இல்லையென்றால் நீங்கள் கவலை கொள்ளுங்கள்.

அவர்கள் கூறினார்கள்: ஒருவரது உள்ளம் தூய்மையற்றதாக இருக்கின்ற நிலையில் ஒருவரது சொல் எந்த அளவு தூய்மையாக இருந்தாலும் அந்த உள்ளம் இறைவனது பார்வையில் மதிப்பைப் பெறாது. மாறாக இறைவனது கோபம் அப்படிப்பட்டவருக்காக பொங்கி எழுகின்றது.

அவர்கள் கூறினார்கள்: எனது ஜமாஅத் இதை புரிந்து கொள்ள வேண்டும். விதை விதைக்கப்படுவதற்காகவே அவர்கள் என்னிடம் வந்துள்ளார்கள். அவர்கள் கனிகள் இருக்கின்ற மரமாக ஆகிவிட வேண்டும்.

எனவே ஒவ்வொருவரும் அவரது அகம் எவ்வாறு உள்ளது என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவரது உள்ளத்தின் நிலை எவ்வாறு உள்ளது என்று பார்க்க வேண்டும்.

கூறுகின்றார்கள்: நாவில் ஒன்றும் உள்ளத்தில் வேறொன்றும் வைத்திருப்பவர்களாக நமது ஜமாஅத்தும் இருக்கின்றது என்றால் பிறகு நமது முடிவு நல்லதாக இருக்காது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் பார்க்கின்றான். ஒரு ஜமாஅத் தமது உள்ளத்தால் காலியாக இருக்கின்றது. ஆனால் வெறும் நாவால் வாதம் செய்கின்றது. அல்லாஹ் தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான். பிறகு அவன் அவர்களை பொருட்படுத்தமாட்டான்.

கூறுகின்றார்கள்: வரலாற்றின் மீது பார்வையை செலுத்துங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்திற்கு செல்லுங்கள். பத்ர் போரின் வரைபடத்தை உங்களது கண்களுக்கு முன்னால் கொண்டு வாருங்கள். பத்ர் போரில் வெற்றி கிடைக்கும் என்ற முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. எல்லாவகையிலும் வெற்றிக்கான நம்பிக்கை இருந்தது. ஆனால் அவ்வாறிருந்தும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழுதழுது மன்றாடி துஆ செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் எல்லா வகையிலும் வெற்றிக்கான வாக்குறுதி இருக்கும் போது மன்றாடி துஆ செய்வதற்கான தேவை என்ன இருக்கின்றது? இவ்வாறு துடிதுடியாய் துடித்து வேதனையுடன் துஆ செய்வதற்கான தேவை என்ன இருக்கின்றது? என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இறைவன் தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான் . இறைவனது வாக்குறுதியில் ஏதாவது மறைமுகமான நிபந்தனை இருக்கலாம். இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய தக்வாவின் உயர் தகுதியாகும். இதே தக்வா மற்றும் இறைவன் மீதுள்ள அச்சம் ஆகியவற்றை கண்முன் நிறுத்தியவாறு அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்து கொண்டிருந்தால் இன்ஷா அல்லாஹ் வெற்றி நம்முடையதாக இருக்கும். எவர்களது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்குமோ அவர்களே வெற்றியைப் பார்க்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.

ஹலாக்குகான் மற்றும் செங்கிஸ்கான் ஆகியோரைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எத்தகைய காட்சியை நம் முன்னால் கொண்டு வருகின்றார்கள் என்றால் இன்றும் நாம் நமது கண்களால் இதே காட்சியைத்தான் காண்கின்றோம். முஸ்லிம்களுக்கென்று எந்த சக்தியும் இல்லை. மற்றவர்களது செயல்திட்டத்திற்கேற்ப இவர்கள் செயல்படுகின்றனர். திருக்குர்ஆனின் போதனைகளை மறந்து விட்டார்கள். தங்களது நாடுகளிலேயே தங்களது பதவியையும் ஆட்சியையும் காப்பாற்றிக் கொள்வதற்காக முஸ்லிம்கள் என்று தம்மை கூறிக்கொள்பவர்கள் மீது வரம்புமீறி கொடுமைகள் இழைக்கின்றனர். பொதுமக்கள் கண்மூடித்தனமாக கொல்லப்படுகின்றனர். இதன் மூலம் இவர்களது சிம்மாசனம் பாதுகாப்பாக இருக்கும் என்று இவர்கள் கருதுகின்றனர். இவை இவர்களது தவறான, முட்டாள்தனமான எண்ணங்களாகும். இவர்களது அநீதிக்கான தண்டனையும் இவர்களுக்கு கிடைக்கும். இவர்களது ஆட்சியும் இவர்களை விட்டு போய்விடும். எந்த நாடுகளில் அரசாங்கம் கவிழ்ந்து விட்டதோ, பொது மக்களது பெயரால் புதிய அரசாங்கம் வந்தனவோ அவர்களது நிலைமையும் இப்படித்தான் இருக்கின்றது. அவர்களும் அநீதியின் பாலிஸியின்படியே செயல்படுகின்றனர். இதன் விளைவாக அவர்கள் தங்களது ஆற்றலை பலவீனமானதாக ஆக்கிக் கொள்கின்றனர். தெரிந்தோ தெரியாமலோ முஸ்லிம்கள் பலவீனமடைந்தவர்களாக உள்ளனர். பலவீனமடைந்தவர்களாகவே இருக்க வேண்டும்; முஸ்லிம்களின் செல்வங்களை மற்றவர்கள் அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற எதிரிகளின் விருப்பங்களை இவர்கள் நிறைவேற்றுகின்றனர். அல்லாஹ் தான் முஸ்லிம் சமுதாயத்திற்கு அறிவை வழங்க வேண்டும். இதற்காகவும் துஆ செய்யுங்கள்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்களை எத்தகைய உயர்வான தகுதியில் பார்க்க விரும்புகின்றார்கள்? என்பதைப் பற்றி நான் கூறிக் கொண்டிருந்தேன். இதற்காக அவர்கள் என்னென்ன கட்டளைகளை நமக்கு தந்துள்ளார்கள்? நான் கூறியது போன்று இந்த உயர்வான தரத்தைப் பெறுவதற்கான உண்மையான அடிப்படை தக்வாவே ஆகும். இந்தக் கருத்தை மேலும் நான் விளக்கிக் கூறுகின்றேன்.

கூறுகின்றார்கள்: நாம் தக்வாவிலும் தூய்மையிலும் எந்த அளவு முன்னேறி இருக்கின்றோம் என்று எப்போதும் பார்க்க வேண்டும்.

கூறுகின்றார்கள்: இதற்கான அளவுகோல் திருக்குர்ஆனே ஆகும். அல்லாஹ் இறையச்சமுள்ளவர்களின் அடையாளங்களில் ஒன்றாக இந்த அடையாளத்தையும் வைத்துள்ளான். அல்லாஹ் இறையச்சமுள்ளவர்களை உலகத்தின் வெறுக்கத்தக்க விசயங்களிலிருந்து விடுவித்து அவர்களது பணிகளுக்கு அவனே பொறுப்பேற்றுக் கொள்கின்றான்.

இது தொடர்பாக அவன் கூறுகின்றான்: எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றாரோ அல்லாஹ் ஒவ்வொரு துன்பத்தின்போதும் அதிலிருந்தும் அவர் வெளியேறுவதற்காக ஒரு வழியை ஏற்படுத்தி விடுகின்றான். அவருக்காக அவரது அறிவிலும் எண்ணத்திலும் இல்லாத வகையில் அவர் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் அவரது ரிஸ்கிற்கான வழிவகையை செய்து விடுகின்றான். இதுவும் இறையச்சமுள்ளவரின் அடையாளமாக இருக்கின்றது. அல்லாஹ் இறையச்சமுள்ளவரை அவசியமற்ற தேவைகளை உடையவராக ஆக்குவதில்லை.

செயலளவில் பார்க்கும் போது ஒரு கடைக்காரர் ஒருவரை ஏமாற்றாமல் அல்லது பொய் சொல்லாமல் தனது பணி நடக்காது என்று கருதுகின்றார். இதன் காரணமாக அவர் ஏமாற்றுவதிலிருந்தும் விலகுவதில்லை. பொய் சொல்லாமல் தனக்கு வேறு வழியில்லை என்பதை அவர் வெளிப்படையாக கூறுகின்றார். ஆனால் இந்த விசயம் ஒருபோதும் உண்மை அல்ல. அல்லாஹ் இறையச்சமுள்ளவர்களை தானே பாதுகாப்பவனாக ஆகிவிடுகின்றான். வேறு வழியின்றி உண்மைக்கு எதிராக செயல்படுகின்ற அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலிருந்து அவன் அவர்களை பாதுகாக்கின்றான்.

கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். இறைவனை எவராவது கைவிட்டு விட்டால் இறைவனும் அவர்களை கைவிட்டு விடுகின்றான். ரஹ்மான் இவர்களை கைவிடும் போது நிச்சயமாக ஷய்த்தான்

இவர்களுடன் தனது உறவை ஏற்படுத்திக் கொள்கின்றான். ஓர் அஹ்மதிக்கு உண்மைக்குரிய உயர் தரத்தை நிலைநிறுத்த ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு இடத்திலும் முயற்சி செய்ய வேண்டும். இன்றைய நாட்களில் பல அஹ்மதிகளும் Asylum –ற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு வருகின்றார்கள். சில நேரங்களில் சில மக்கள் தவறான வாக்குமூலத்தைக் கொடுக்கின்றனர். ஆனால் உண்மையின் விசயத்தைக் கூறினால், பாகிஸ்தானில் அஹ்மதிகளின் நிலைமைகளை எடுத்துக்கூறி பிறகு தங்களது கோரிக்கைகளை அவர்கள் வைத்தால் அதனது தாக்கம் இருக்கும். நான் எவர்களிடம் உண்மையைக் கூறுமாறு ஆலோசனை கூறினேனோ அவர்களிடம் வழக்குறைஞர்கள் கதைகளைக் கூற விட்டு விடாதீர்கள். மாறாக, உண்மையான விசயத்தை, உண்மையான நிலைமைகளை கூறுங்கள் என்று கூறினேன். அவர்கள் அதற்கேற்ப செயல்பட்டதால் அவர்களது வழக்குகளில் அவர்கள் வெற்றி பெற்றனர். பாகிஸ்தானில் அஹ்மதிகள் மீது கொடுமை இழைக்கப்படுகிறது. நிச்சயமாக இது நடைபெறுகிறது. இதில் எந்த சந்தேகமும் இல்லை. அநீதியிழைப்பதில் இப்போது எல்லை மீறி செயல்படுகின்றனர். ஆனால் இந்த அநீதியின் கதைகளை உண்மை வடிவில் எடுத்துக்கூறி தவறான வாக்குமூலம் கொடுக்காமல் இருந்தால், பிறகு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தால் பிறகு அதன் மூலமாகவும் நமது குறிக்கோளை நாம் அடைந்து விடலாம்.

எவ்வாறிருப்பினும், இந்த சமுதாயத்தில் பெரும்பாலாரிடத்தில் அனுதாப உணர்வு இருக்கத்தான் செய்கின்றது. அதன் அடிப்படையில் அவர்கள் உதவி செய்கின்றனர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நமது உண்மையின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு அவர்கள் ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: மனிதனின் நன்மைகளில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று கடமையாக்கப்பட்டவை. மற்றொன்று, நஃபிலான அதாவது உபரியான நன்மைகள். அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமையுடன் தொடர்புடைய கடமைகளுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறை அடியார்களின் உரிமைகளுடன் தொடர்புடைய விசயங்கள் பற்றியும் கூறியுள்ளார்கள். இதிலும் கூட ஃபர்லான விசயங்களும் நஃபிலான விசயங்களும் உள்ளன. உதாரணமாக, மனிதன் மீது கடமையாக்கப்பட்ட விசயங்களில் கடனை திருப்பிக் கொடுப்பது இருக்கின்றது. யாரிடம் கடன் வாங்கப்பட்டுள்ளதோ அவருக்கு அந்த கடனைத் திருப்பிக் கொடுப்பது கடமையாகும். அல்லது ஒருவர் செய்த நன்மைக்குப் பதிலாக நன்மை செய்வது முஸ்லிம்கள் மீதும் அஹ்மதி முஸ்லிம்கள் மீதும் கடமையாகும்.

கூறுகின்றார்கள்: இந்த ஃபர்லான விசயங்களைத் தவிர ஒவ்வொரு நன்மையுடன் நஃபில்களும் உள்ளன. அது ஒருவருக்குள்ள உரிமையை விட அதிகமாக அவருக்கு நன்மை செய்வதாகும். நன்மைக்குப் பதிலாக நன்மை செய்து விடுகின்றார். கடன் வாங்கியவரிடம் அதை திருப்பிக் கொடுத்து விடுகின்றார். எவ்வாறிருப்பினும், இது அவர் மீது கடமையாகும். ஆனால் கொஞ்சம் அதிகமாக செலுத்துவது இதன் நஃபிலாகும். நபிமார்கள் எப்போதும் இந்த நடைமுறைக்கு ஏற்பவே செயல்பட்டுள்ளனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்மாதிரி நம் முன்னால் உள்ளது. எல்லாரையும் விட சிறந்த முறையில் அவர்கள் இதை செயல்படுத்திக் காட்டியுள்ளார்கள்.

கூறுகின்றார்கள்: எவ்வாறு நன்மைக்கு எதிரில் நன்மை செய்வதுடன் மேலும் நன்மை செய்வது உள்ளது. இது நஃபிலாகும். ஒருவர் இன்னொருவர் மீது நன்மை செய்தால் அதற்குப் பதிலாக அவருக்கு நன்மை செய்வதன் மூலமாகவே அதை ஈடுசெய்ய முடியும். அவ்வாறு செய்ய வேண்டும். இது அவர் மீது கடமையாகும். அல்லாஹ்வும் நன்மைக்குரிய ஈடு நன்மையைத் தவிர வேறொன்றும் இல்லை என்றே கூறுகின்றான். ஆனால் இந்த கடமைகளை நிறைவேற்றிய பிறகு மனிதன் பிறர் மீது மேலும் அதிகமாக நன்மைகளை செய்யும் போது இந்த செயல்கள் தான் ஃபர்லான விசயங்களை முழுமை அடையும்படி செய்கின்றது என்று அவர்கள் கூறுகின்றார்கள். அதிகமான நற்கூலி கிடைப்பதற்கு காரணமாக அது ஆகி விடுகின்றது.

கூறுகின்றார்கள்: ஹதீஸின்படி இப்படிப்பட்ட மக்கள் எத்தகைய உயர் தகுதியைப் பெற்று விடுகின்றனர் என்றால், இவர்களது கை, கால்களாக அல்லாஹ் ஆகி விடுகின்றான். எதுவரையென்றால், இவர்கள் பேசும்

நாவாக நான் ஆகி விடுகின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஏனென்றால், இப்படிப்பட்டவர்களது ஒவ்வொரு சொல்லும் செயலும் இறைவனது திருப்தியைப் பெறும் வகையில் இருக்க வேண்டும் என்ற துடிப்புடன் அமைவதால் அவை இறைவனுக்காக செய்யப்படுவதுடன் அவை இறைவனின் செயல்களாக ஆகி விடுகின்றது. இறைவனது வெறுப்பிற்கு காரணமாக இருக்கின்ற எந்த செயலும் அவர்களால் செய்யப்படாது.

தனது பைஅத்தில் இணைந்த பிறகு இந்த இலக்கைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். இந்த இலக்கை அடைவதற்காக நாம் நமது எல்லா தகுதிகளையும் பயன்படுத்தும் போதுதான் பைஅத்திற்குரிய உரிமையை செலுத்தியவர்களாக நாம் ஆக முடியும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதைப் பெறுவதற்கு பெரும் முயற்சி செய்ய வேண்டியது வரும். ஒரு இரவில் இந்த தகுதியை நாம் அடைந்துவிட முடியாது. இதற்காக நஃப்ஸின் உணர்வுகளிலிருந்தும் நாம் தூய்மை அடைய வேண்டும். மன இச்சைகளை விட்டு விட்டு இறைவனது விருப்பத்திற்கேற்ப செயல்பட வேண்டும். எனது எந்தவொரு செயலும் ஆகாத செயலாக இருக்கக்கூடாது என்பதற்காக முயற்சி செய்ய வேண்டும். மாறாக அவை அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப இருக்க வேண்டும். இது நடந்து விட்டால் அன்றாடம் ஏற்படுகின்ற பல்வேறு துன்பங்களிலிருந்து மனிதன் தப்பித்துக் கொள்வான் என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் விருப்பத்திற்கு எதிராக ஏதாவதொரு செயலை செய்யும் போது தான் மக்கள் துன்பங்களில் சிக்கிக் கொள்கின்றனர் என்பதை அவர்கள் தெளிவுபட கூறியுள்ளார்கள். இந்த தருணத்தில் இம்மக்கள் அல்லாஹ்வின் விருப்பத்தின் கீழ் வருவதில்லை. மாறாக, தங்களது உணர்வுகளின் கீழ் வந்து அதற்கேற்ப செயல்படுகின்றனர். உதாரணமாக, கோபத்தின் காரணமாக ஏதாவதொரு செயல் இவர்கள் மூலமாக ஏற்பட்டு விட்டால் இதன் காரணமாக வழக்குகள் தொடரப்படுகின்றன. நீதிமன்றத்திற்கு அலைய வேண்டியது வருகின்றது. சிறைச்சாலைக்கு செல்ல வேண்டியது வருகின்றது. இறைவனது வேதத்தின் விருப்பம் இல்லாமலும் அதனிடம் ஆலோசனை கேட்காமலும் எனது எந்தவொரு அசைவும், அசைவற்ற நிலையும் இருக்காது. எந்த செயலும் இவ்வாறாக செய்யப்படாது. ஒவ்வொரு விசயத்திற்காகவும் அல்லாஹ்வின் வேதத்தைப் பார்க்க வேண்டும் என்று எண்ணி செயல்பட்டால் அல்லாஹ்வின் வேதம் தீய செயல்களிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்கான ஆலோசனையை அவருக்கு வழங்கும்.

அவ்வாறு செயல்படாமல் அல்லாஹ்வின் வேதத்தை விட்டு விட்டு தனது உணர்வுகளின் கீழ் வருவதற்கு நீங்கள் முயற்சி செய்தால் அதனால் உங்களுக்கு இழப்பு ஏற்படும். எனவே, இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவரிடம் பைஅத் செய்த பிறகு நாம் நமது ஒவ்வொரு விசயத்திலும் அல்லாஹ்வின் வேதத்திடம் ஆலோசனை கேட்கின்றோமா? அல்லது நமது நஃப்ஸிடம் ஆலோசனை கேட்கின்றோமா என்பதை நாம் ஒவ்வொருவரும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நமது நஃப்ஸ் நம்மை அல்லாஹ்வின் வேதம் கூறுகின்ற ஆலோசனைக்கேற்ப செயல்படுவதிலிருந்தும் நம்மை தடுக்கின்றது என்றால் நாம் நம்மைப் பற்றி கவலைப்பட வேண்டும். இது மாநாட்டின் நாட்களாகும். இந்த நாட்களில் நமது தரூது ஓதுவது, இஸ்திக்ஃபார் செய்வது ஆகியவற்றின் பக்கம் அதிகமாக ஈடுபட வேண்டும். அதன் மூலம் நமது சீர்திருத்தத்தின் பக்கம் அதிகமாக நாம் கவனம் செலுத்த முடியும். தமது விருப்பங்களையும் உணர்வுகளையும் இறைவனது விருப்பங்கள், அவனது கட்டளைகள் ஆகியவற்றிற்கேற்ப வடிவமைத்துக் கொள்வதற்கு நாம் முயற்சி செய்து அதற்காக துஆக்கள் செய்ய வேண்டும். அதன் மூலம் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்திற்குரிய உரிமையை நிறைவேற்றியவர்களாக ஆக முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத் உயர்வான தரத்தை அடைய வேண்டும் என்பதற்காக எந்த கட்டளைகளைக் கூறியுள்ளார்களோ அவை அனைத்தையும் எடுத்துக் கூறுவது என்பது சாத்தியமற்றதாகும். ஒரு முக்கியமான விசயத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதை நான் கூற விரும்புகின்றேன். அந்த அறிவுரை எப்படிப்பட்டதென்றால் இதை நாம் பின்பற்றி நடந்தால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதன் பக்கம் நமது பாதங்கள் முன்னேறிச் செல்லும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இரவில் எழுங்கள். துஆ செய்யுங்கள். அல்லாஹ் உங்களுக்கு தனது வழியைக் காட்டுவான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களும் படிப்படியாகத்தான் தர்பிய்யத் பெற்றார்கள். அவர்கள் முதலில் எப்படி இருந்தார்கள்? ஒரு விவசாயி விதைத்த விதையாகவே அவர்கள் இருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீர் பாய்ச்சினார்கள். அவர்களுக்காக துஆ செய்தார்கள். விதை சரியானதாக இருந்தது. நிலமும் சிறப்பானதாக இருந்தது. அதனால் இந்த நீர்ப்பாய்ச்சலின் விளைவாக சிறந்த கனிகள் கிடைத்தது. எவ்வாறு ஹுஸூர் (அலை) அவர்கள் நடந்தார்களோ அவ்வாறு அவர்களும் நடந்தார்கள். அவர்கள் இரவு வரட்டும்; பகல் வரட்டும் என்று காத்திருக்கவில்லை. நீங்கள் உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்யுங்கள். தஹஜ்ஜுத்தில் எழுங்கள். துஆ செய்யுங்கள். உள்ளத்தை சீர்படுத்துங்கள். பலவீனங்களை விட்டு விடுங்கள். இறைவனது திருப்திக்கேற்ப உங்களது சொல்லையும் செயலையும் ஆக்கிக் கொள்ளுங்கள்.

உறுதியாக நம்புங்கள். எவர்கள் இந்த போதனைகளை தொடர்ச்சியாக செயல்படுத்துவாரோ செயலளவில் துஆ செய்வாரோ, செயலளவில் தமது வேண்டுதல்களை இறைவன் முன்னால் கொண்டு வருவாரோ அல்லாஹ் அவர் மீது அருள் செய்வான். அவரது உள்ளத்தில் மாற்றம் ஏற்படும். இறைவனிடம் அவநம்பிக்கை அடையாதீர்கள்.

கூறுகின்றார்கள்: நாம் என்ன வலி ஆகவா ஆக வேண்டும்? என்று சிலர் கேட்கின்றனர். அவர்கள் இதற்கு சிறிதும் கண்ணியமளிக்கவில்லை என்பது வேதனைக்குரிய விசயமாகும். உண்மையில் மனிதன் இறைவனது நண்பனாக ஆக வேண்டும். அவர் நேரான வழியில் சென்றால் இறைவனும் அவன் பக்கம் வருவான். பிறகு ஓரிடத்தில் அவரது சந்திப்பு நிகழும். மனிதனது அசைவு அவன் பக்கம் மெதுவாக இருக்கும். அதற்கு எதிரில் அவன் பக்கம் இறைவனது அசைவு மிக விரைவாக இருக்கும். இதன் பக்கமே, *எந்த மக்கள் நம்மை வந்தடைய முயற்சி செய்தார்களோ நிச்சயமாக நாம் நம்மை வந்தடையும் வழிகளின் பக்கம் அவர்களுக்கு வழிகாட்டுவோம்* என்ற வசனம் சுட்டிக் காட்டுகின்றது.

கூறுகின்றார்கள்: என்னென்ன விசயங்கள் தொடர்பாக நான் இன்று அறிவுரை கூறியுள்ளேனோ அவற்றில்தான் இரட்சிப்பிற்கான அடித்தளம் இருக்கின்றது. இறைவனுடனும் படைப்பினங்களுடனும் உள்ள உங்களது தொடர்பு எப்படி இருக்க வேண்டும் என்றால், அதில் இறை திருப்தியைப் பெறுவது மட்டுமே குறிக்கோளாக இருக்க வேண்டும். இதன் மூலம், வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் என்பதற்கு பொருந்தக் கூடியவர்களாக நீங்கள் ஆக வேண்டும்.

இந்த மாநாட்டு நாட்கள் நமக்கு கிடைத்துள்ளன. சில நாட்களுக்கு முன்னால் ரமலான் கழிந்தது. அதில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்தோம். மாநாட்டு நாட்களில் திருக்குர்ஆன், ஹதீஸ்கள் மற்றும் சுன்னத்தின் ஒளியில் அறிவுப்பூர்வமான மற்றும் தர்பிய்யத் தொடர்பான விசயங்களை நாம் கேட்போம். இறைவனைப் பற்றிய அறிவு அவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது ஆகியவற்றின் பக்கம் மேலும் அதிகமாக பலருக்கும் கவனம் ஏற்படும். இந்த அறிவைப் பெற்றுக் கொள்வதுடன் நமது செயல்களையும் நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது. எவற்றை நாம் பெற்றுக் கொண்டோமோ அவற்றை பாதுகாப்பதும் அதிலிருந்து அருள்களைப் பெற்றுக் கொண்டே செய்வதற்கான தேவை இருக்கின்றது. உங்களது ஒவ்வொரு செயலையும் தொடர்ச்சியாகவும் முறையாகவும் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த மாநாட்டையும் இந்த அருள்களை சேகரிப்பதற்குரிய இறைவனின் அருளாக நாம் கருத வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

அமைப்பு ரீதியாகவும் சில விசயங்களை நான் கூற விரும்புகின்றேன். மாநாட்டிற்கு வரும்போதும் இங்கிருந்து திரும்பிச் செல்லும் போதும் கார்களில் வருகின்றவர்கள் கார்களை பார்கிங் செய்யும் இடங்களிலிருந்து மாநாட்டிற்கு வருகின்ற போது பேருந்தில்தான் வருவார்கள். பேருந்துகள் மூலமாகவே திரும்பிச் செல்வார்கள். வரும்போதும் போகும் போதும் பார்க்கிங் செய்யும் இடங்களில் பார்க்கிங் செய்யும் போதும் எந்த விதமான

நெரிசலும் இருக்கக் கூடாது. முறையாக ஒரு ஏற்பாட்டின் கீழ் வரிசையாக ஒழுங்குமுறையைக் கடைபிடித்தவாறு செல்ல வேண்டும். இவ்வாறு மாநாட்டுத் திடலில் நுழையும் போதும் எங்கு செக்கிங் செய்யப்படுகிறதோ ஸ்கேனர்ஸ் போன்றவை இருக்கின்றதோ அங்கு முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். வரிசையாகவும் ஒழுங்குமுறையைப் பேணியவாறும் வர வேண்டும். ஏனென்றால், எங்கு வரிசையை நீங்கள் உடைப்பீர்களோ அங்கு ஒழுங்கற்ற நிலை ஏற்பட்டு விடும். பிறகு காலதாமதம் ஏற்படுகின்றது. இதனால் பிறகு முறையீடுகள் செய்யப்படுவது அதிகரிக்கின்றது. உங்களது நேரமும் வீணாகும். மாநாட்டு அமைப்பாளர்கள் கவலைப்படுவதற்கு இது காரணமாக ஆகி விடுகின்றது. இவ்வாறே பொருட்களைச் செக்கிங் செய்யப்படும் போது இதனால் சிலர் முறையீடு செய்கின்றனர். இவ்வாறு என்னிடம் சில புகார்கள் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தங்களை செக்கிங் செய்து கொள்ள வேண்டும். இது உங்களது நன்மைக்காகவே இருக்கின்றது. நான் ஒவ்வொரு மாநாட்டின் போதும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளேனோ, மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தனது சுற்றுச்சூழலில் உள்ளவர்கள் மீது தமது பார்வையை வைத்திருப்பது அவசியமானதாகும். இது மிகப்பெரும் பாதுகாப்பிற்கான அமைப்பாகும். நாம் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டவாறு எல்லா பக்கமும் நமது பார்வையை செலுத்துபவர்களாக இருந்தால் இத்தகைய ஒரு அம்சம் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மட்டும் தான் இருக்கின்றது. உலகில் வேறு எங்கும் இது இல்லை. இது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மட்டும் குறிப்பாக இருக்கின்ற சிறப்பம்சமாகும். இதிலும் கூட ஒருபோதும் நீங்கள் தளர்ந்து விடாதீர்கள். கவனமில்லாமல் இருந்து விடாதீர்கள். சந்தேகத்திற்கு இடமளிக்கின்ற எந்தவொரு செயல் எவரிடம் தென்பட்டாலும் அமைப்பாளர்களுக்கு அதுபற்றி தெரிவித்து விடுங்கள். ஏதாவதொரு இடத்தில் ஒரு பேக் கிடப்பதை நீங்கள் பார்த்தால் டியூட்டியில் இருப்பவர்களுக்கு அதுபற்றி தெரிவியுங்கள்.

இந்த முறை மாநாடு நடைபெறும் தேதிகளில் மாற்றம் இருப்பதால் இரவு நேரத்தில் இங்கு கூடாரமிட்டு அல்லது ஒட்டுமொத்தமாக மக்கள் தங்கும் இடங்களில் தங்குபவர்களுக்கு இரவில் குளிர் அதிகமாக இருக்கும். குளிரின் தாக்கத்தை அவர்கள் உணர்வார்கள். சில மக்களது இயல்பு கூர்உணர்வு கொண்டதாக இருக்கும். அதை தாங்க முடியாமல் இருக்கும். எனவே அவர்கள் வெப்பம் தருகின்ற ஆடைகளை அணிந்தவாறு தூங்க வேண்டும். ரஸாயிக்கான ஏற்பாடும் உள்ளது. அவற்றைக் கொண்டு வராதவர்கள் இங்கிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். ஒன்றிரண்டு வருடங்கள் வேறு வழியின்றி மாநாடு இந்த சமயத்தில் நடக்கின்றது. பிறகு அதற்குரிய சரியான சமயத்தில் மாநாடு நடைபெறும் இன்–ா அல்லாஹ். பணியில் இருப்பவர்களுக்கு முதலிலேயே நான் அவர்களது கடமைகள் என்ன என்பதைப் பற்றி நான் கவனமூட்டியுள்ளேன். விருந்தோம்பலுக்குரிய உரிமையை நிறைவேற்றுங்கள். எப்போதும் போன்றே ஒவ்வொரு துறையும் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி தொண்டு செய்ய வேண்டும். பிறகு தூய்மை தொடர்பாகவும் குறிப்பாக டாய்லெட் தொடர்பாக அதிகமாக புகார்கள் வருகின்றன. பொதுவாக இதில் எந்தக் குறையும் கூறப்படவில்லை என்றாலும் சிலரது இயல்பு தூய்மையை மிகவும் பேணுவதில் அக்கறை காட்டக்கூடியதாக இருப்பதால் அசுத்தத்தை அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது. எனவே இங்கு இவற்றை சுத்தமாக வைத்திருப்பதற்கான ஏற்பாட்டை செய்வது மாநாட்டு அமைப்பாளர்களின் பொறுப்பாக இருக்கின்றதோ அவ்வாறே அங்கு வருகின்ற மக்களும் அவற்றை பயன்படுத்திய பிறகு அவற்றை சுத்தம் செய்து விட்டு வெளியே வர வேண்டும். இந்த ஏற்பாட்டிற்காக இந்த முறை ஒரு தனிக்குழு உருவாக்கப்பட்டிருக்கின்றது. சிறந்த ஏற்பாடு இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறிருந்தும் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடு இருக்க வேண்டும்.

நினைவில் கொள்ளுங்கள்! தூய்மையைப் பேணுவதும் சாதாரண வி–யமல்ல. இது ஈமானின் ஒரு பகுதியாகும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஒரு மூஃமின் எல்லா வகையில் தனது ஈமானின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத் சகோதரர்களுக்கு கவனமூட்டியிருப்பது போன்று தொழுகைகளை பேணுவது, நஃபில் தொழுகைகளை தொழுவது மற்றும் துஆக்கள் செய்வதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துங்கள். குறிப்பாக இந்த நாட்களில் தரூது ஓதுவது, நஃபிலான தொழுகைகளை தொழுவது போன்றவற்றின் பக்கம் அதிகம்

கவனம் செலுத்துங்கள். இங்கு தங்கி இருப்பவர்களுக்கு இங்கு வந்து கூட்டாக தஹஜ்ஜுது தொழுவதற்கான ஏற்பாடு இங்கு செய்யப்பட்டுள்ளது. வீடுகளில் தங்கி இருப்பவர்கள் வீடுகளில் முறையாக தஹஜ்ஜுது தொழுது வாருங்கள். அதன் மூலமாக அல்லாஹ் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் தொடர்பான அசாதாரணமான காட்சிகளை நமக்க காட்டுவானாக! குறிப்பாக பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளை துஆக்களில் நினைவு கூறுங்கள். நான் கூறியது போன்று அவர்கள் மீது வரம்பு மீறிய கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. நேற்றும் கூட அங்கு ஒரு ஷஹாதத் நிகழ்ந்துள்ளது. இன்னொரு நபரின் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் அதிலிருந்தும் அவர் தப்பி விட்டார். உலகின் மற்ற பகுதிகளில் எங்கெல்லாம் அஹ்மதிகள் மீது அநீதியிழைக்கப்படுகிறதோ அவர்களையும் உங்களது துஆக்களில் நினைவு கூறுங்கள். அல்லாஹ் இந்த கொடுமையிழைப்பவர்களை பிடிப்பதற்கான வழிவகையை ஏற்படுத்துவானாக! உலகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடிமையை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

நான் கூறியது போன்று ஒரு -ஹாதத் நிகழ்ந்துள்ளது. இந்த ஷஹீதின் ஜனாஸா காயிப் தொழுகையை நாம் தொழுவோம். அத்துடன் இன்னும் சில ஜனாஸாக்கள் உள்ளன. இந்த ஷஹீது மதிப்பிற்குரிய ராவு அப்துல் கஃப்பார் சாஹிப் ஆவார்கள். இவரை நேற்று அதாவது 6.09.2012 ம் தேதி ஷஹீதாக்கி இருக்கிறார்கள். சாக்கிவாடா என்ற இடத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் இவர் பணிபுரிந்து அங்கு பாடம் கற்றுக்கொடுத்த பிறகு மாலை 5.00 மணி அளவில் இவர் வீட்டிற்கு திரும்பி வருவதற்காக பஸ்ஸில் ஏறி பயணம் செய்ய ஆரம்பித்த போது, அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் அவர் மீது துப்பாக்கிச்சூடு செய்தனர். இதன் விளைவாக இரண்டு தோட்டாக்கள் அவர் மீது பாய்ந்தன. ஒன்று தோளில் பட்டது. இரண்டாவது தோட்டா கழுத்தின் பிற்பகுதியில் பட்டு தலை வழியாக வெளியேறியது. இதனால் அவர் அதே இடத்தில் -ஹிதானார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஷஹாதத் நிகழ்ந்த சமயத்தில் ஷஹீது மர்ஹூமின் வயது 42 ஆகும். மர்ஹூம் அவர்கள் 2012ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து வஸிய்யத் செய்திருந்தார். அவரது வஸிய்யத்திற்கு அனுமதி கிடைக்கவில்லையென்றாலும் அவர்கள் வஸிய்யத்திற்காக சந்தா செலுத்தி வந்தார்கள். ஜமாஅத் தொண்டுகளில் இவர் தமது ஹல்காவின் ஸயீம் அன்ஸாருல்லாஹ்வாக இருந்தார். சிறப்புத் திட்டங்களின் செயலராகவும் இருந்து வந்தார். மிகவும் தூய பற்றுள்ள அஹ்மதியாக இருந்தார். மிக நல்ல குணமுள்ளவராக இருந்தார். அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதில் மிகுந்த ஆர்வம் அவர்களுக்கு இருந்தது. இவ்வாறே அவருக்கும் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஜமாஅத்துடன் மிகவும் உறுதியான தொடர்பு இருந்தது. மிகவும் நல்லொழுக்கமுள்ள துஆக்களை செய்கின்ற நபராக இவர் இருந்தார். கிலாஃபத்துடன் இவருக்கு ஆழமான நேசம் இருந்தது. காலத்தின் கலீஃபா தரப்பிலிருந்தும் என்ன திட்டம் அறிவிக்கப்பட்டாலும் அதில் இவர் ஆர்வத்துடன் பங்கு பெறுவார். 1995 ஆம் ஆண்டு இவரது திருமணம் ரானா அப்துல் கஃப்பார் சாஹிபின் மகளான சஅதியா குல்ஸூம் சாஹிபாவுடன் நடைபெற்றது. அவர்கள் மூலமாக அவருக்கு இரண்டு மகன்களும் இரண்டு மகள்களும் உள்ளனர். இவர்கள் 1988 ல் முபாஹலாவின் விளைவையும் ஜியாவுல் ஹக்கின் முடிவையும் பார்த்து அந்த நேரத்தில் பைஅத் செய்தார்கள். இவரும் இவரது சகோதரியும் அப்போது பைஅத் செய்தனர். இவருக்கு முன்னமாக இவரது தாயார் அஹ்மதியாகி இருந்தார். அவர் மூலமாக இவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் அறிமுகமானது. பிறகு அதில் வளர்ச்சி ஏற்பட்டது.

இவர்களது சகோதரி கூறுகின்றார்கள்: நான் 8 வருடங்களுக்கு முன்பு கனவு பார்த்தேன். அதில் இவர் மீது குண்டு பட்டது. பிறகு இவர் மரணமடைந்ததைப் பார்த்தேன். ஆனால் அருகில் சென்று பார்த்த போது அவர் உயிருடன் இருப்பதை நான் பார்த்தேன். இந்த ஷஹாதத்தின் உயர் தகுதி இவருக்கு கிடைக்க வேண்டியதிருந்தது. ஷஹீது ஒருபோதும் மரணிப்பவர்கள் அல்ல. அவர்களை நீங்கள் மரணித்தவர்கள் என்று கருதாதீர்கள் என்ற அறிவிப்பை அல்லாஹ் செய்துள்ளான். இவ்வாறே இவரது மகளும், மனைவியும் ஒரு கனவு பார்த்திருந்தார்கள். அதுவும் இவரது -ஹாதத்துடன் தொடர்புடையதாகும். இவரது மனைவி இந்தக் கனவை இவரிடம் கூறிய போது அதைக் கேட்ட அவர் நான் ஷஹீதாகி விட்டால் நீங்கள் அழக்கூடாது என்று வலியுறுத்திக் கூறினார்.

மேலும் இவரைப் பற்றி தெரிந்துள்ள ஒருவர் கூறுகின்றார்: ஞாயிற்றுக்கிழமை அன்று கராச்சியிலுள்ள அஹ்மதிய்யா ஹாலில் மீட்டிங் நடைபெற்றது. வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது இவர் தனது இன்னொரு நண்பரிடம் மரணம் எல்லாருக்கும் வரும். ஆனால் அல்லாஹ் எனக்கு ஷஹாதத்தின் மரணத்தை வழங்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும் என்று கூறினார்கள். அல்லாஹ் ஷஹீது மர்ஹூமுடைய தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக! இவரது ஒரு மகன் ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படிக்கின்றார். இரண்டாவது மகன் மெட்ரிக் படித்து வருகின்றார். இவரது வயது 14. 10 வயதில் ஒரு மகளும், 7 வயதில் இன்னொரு மகளும் இவருக்கு இருக்கின்றார்கள். இவர்களது தலைமுறையிலும் எப்போதும் கிலாஃபத்துடன் பற்றுமிக்க தொடர்பு நிலை நிற்கட்டும்!

இன்று நான் தொழ வைக்க இருக்கின்ற இரண்டாவது ஜனாஸா காயப் தொழுகை மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதி குத்தூஸிய்யா பேகம் சாஹிபா உடையதாகும். இவர்கள் மதிப்பிற்குரிய ஸய்யிதா நவாப் அமத்துல் ஹபீல் பேகம் சாஹிபா மற்றும் நவாப்அப்துல்லாஹ் கான் சாஹிப் ஆகியோரின் மகளாவார்கள். இவர்கள் 1927ம் ஆண்டு ஜுன் மாதம் பிறந்தார்கள். செப்டம்பர் 1ம் தேதி ரப்வாவிலுள்ள தாஹிர் ஹார்ட் இன்ஸ்டியூட்டில் வைத்து இவர்களது வஃபாத் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்களது குழந்தைப் பருவம் காதியானில் சிறந்த மார்க்க சூழலில் கழிந்தது. அங்கேயே அவர்கள் கல்வி கற்றார்கள். பிரிவினையின் போது அவர்களுக்கு வயது 20. அப்போது அவர்கள் காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்து லாஹூர் வந்து சேர்ந்தார்கள். காதியானில் வைத்து லஜ்னா மற்றும் நாஸிராத் மத்தியல் இவர்களது தொண்டு இருந்து வந்தது. இங்கு இவர்களது தொண்டுகள் இருந்து வந்தது. இவர்கள் மிர்ஸா குலாம் காதிர் ஷஹீது அவர்களின் தாயார் ஆவார்கள். அவர்கள் தமது ஒரு கட்டுரையில் இவ்வாறு எழுதுகின்றார்கள். அதை கூறுவது அவசியமானது என்று நான் கருதுகின்றேன்.

அவர்கள் எழுதுகின்றார்கள்: மிர்ஸா குலாம் காதிர் அவர்களின் ஷஹாதத்திற்கு பிறகு ஒரு பழைய கசங்கிய காகிதம் ஒன்று என் முன்னால் இருக்கின்றது. இது 12 அல்லது 15 வருடம் பழமையான தாளாகும். இதில் ஒரு துஆ எழுதப்பட்டிருந்தது. அதை நான் கவிதையாக்க முயற்சி செய்திருந்தேன். ஆனால் நான் கவிஞர் அல்ல. ஆனால் உணர்வுகளால் உந்தப்பட்டவனாக நான் கவிதை கூற முயற்சி செய்தேன். ஆனால் என்னால் அது முடியவில்லை. அந்த கவிதை வரிகள் இவையாகும்.

ஒளியிலும், பிரகாசத்திலும் இவர்களில் ஒருவர் மற்றவரை விட சிறந்து விளங்க வேண்டும். வானத்தில் மின்னுகின்ற நட்சத்திரங்களைப் போன்று இவர்கள் இருக்க வேண்டும். இந்த தலைமுறையில் பெருமைக்குரியவர்கள் பிறக்க வேண்டும். இது எனது துஆ ஆகும். எனது நேசத்திற்குரியவனே! இந்த துஆவை ஏற்றுக் கொள்வாயாக!

இந்த நான்கு வரி கவிதையில் எதுகை, மோனை ஆகியவை இல்லாமல் இருந்தாலும் அது என் உணர்வுகளால் நிரம்பியிருக்கின்றது. நான் எதனை உரைநடையில் எழுதியிருந்தேனோ அது இதுவாகும்.

இறைவா! எப்போதும் எனது துஆ இதுவாகத்தான் இருந்திருக்கின்றது. எனது மடியில் வளர்ந்தவர்கள் உனக்காக அர்ப்பணமாகி விட வேண்டும். நேரம் வருகின்ற போது எதிரிகள் இவர்களது தலையை வெட்டி விடுவதிலிருந்தும் இவர்களை நீ விலக்கி வைக்காதே! உனது கட்டளை இல்லாமல் விருப்பங்களுக்கு எத்தகைய உண்மையான தன்மையும் இருக்க முடியாது. உனது கட்டளையின்றி எந்த ஆதரவும் கிடைக்க முடியாது. இறைவா! எனது துஆவை கேட்பாயாக! எனது மகன்களில் ஒருவர் மற்றவரை விட ஒளிமிக்கவர்களாகவும் சிறந்தவர்களாகவும் திகழ வேண்டும். வானத்தில் நிலவைப் போன்றும் நட்சத்திரங்கள் போன்றும் அவர்கள் பிரகாசிக்க வேண்டும். அவர்களது தலைமுறையிலிருந்து நாட்டிற்கு பெருமை சேர்ப்பவர்களும் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்பவர்களும் பிறக்க வேண்டும். இதுவே எனது வேண்டுதலாகும். அதை ஏற்றுக் கொள்பவன் நீதான். விதியை எழுதக்கூடியவனே! எனது பிள்ளைகளுக்காக ஆயுளையும், செல்வத்தையும், நற்பாக்கியங்களையும் எழுதி விடுவாயாக!

இவர்கள் கூறுகின்றார்கள்: காதிரின் குர்பானிக்கு சில நாட்கள் முன்னதாக எனது பழைய காகிதங்களில் இருந்த எனது துஆ எனக்கு தென்பட்டது. நான் அதை எத்தகைய உணர்வுடன் செய்தேன் என்று எனக்கு தெரியவில்லை. அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அல்லாஹ்வே! நான் இவருக்காக அவர் உயிர் தியாகம் செய்ய வேண்டும் என்று வேண்டியிருந்தேனே! என நினைத்து சில நொடிகள் எனது உள்ளம் நடுங்கியது. அப்போது உள்ளேயிருந்து ஒரு பெண் இவ்வாறு கூறினாள். அல்லாஹ்வே! சிறு வயதில் இவர்களிடமிருந்தோ அல்லது என்னிடமிருந்தோ இந்த தியாகத்தை நீ பெறக்கூடாது. இறைவா! இவர்களுக்கு நீண்ட ஆயுளை வழங்க வேண்டும் என்று நான் துஆ செய்தேன். எனது துஆ கபூலாகி விட்டது. அவர் இளைஞராக இருக்கும் போது அல்லாஹ் அவரிடமிருந்து இந்த தியாகத்தைப் பெற விரும்பியுள்ளான் என்பதைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? இளைஞராக இருக்கும் போது எனது மகனை அவன் என்னிடமிருந்து எடுத்து விடுவான் என்பது தீர்மானிக்கப்பட்டிருந்தது. தியாகம் எவ்வளவு பெரிதாக இருக்குமோ அதே அளவு நற்கூலியும் பெரிதாக இருக்கும்.

எவ்வாறிருப்பினும், மகனது தியாகத்தைப் பார்த்து அவர்கள் மிகுந்த தைரியத்தை வெளிப்படுத்திக் காட்டினார்கள். நானே அதற்கு சாட்சியாக இருக்கின்றேன். மிகவும் தைரியத்துடன் அவர்கள் இந்த துன்பத்தை சகித்துக் கொண்டார்கள். இவர்களிடம் துக்கம் விசாரிப்பதற்காக நான் இவர்களிடம் சென்ற சமயத்தில் மிகுந்த புன்சிரிப்புடன் இவர்கள் காதிர் ஷஹீதுடைய சிறப்புகளைப் பற்றி கூறினார்கள். மிகுந்த தைரியத்தை வெளிப்படுத்தினார்கள். என்னுடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தார்கள். கடைசியாக அவர் எனக்கு எழுதிய கடிதத்திலும் கூட இந்த சொற்றொடர்தான் இருக்கின்றது. அல்லாஹ் எனக்கும் எனது சந்ததிகளுக்கும் தக்வாவை வழங்குவானாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது துஆக்களுக்கு வாரிசாக்குவானாக! அவர்களது தலைமுறையில் வந்ததற்குரிய உரிமையை நிறைவேற்றுபவர்களாக நம்மை ஆக்கி வைப்பானாக! இந்த துஆ அவர்களது எல்லா சந்ததிகளுக்காகவும் அவர்களது குடும்பத்திலுள்ள அனைவருக்காகவும் நிறைவேறும்படி அல்லாஹ் செய்வானாக!

நான் ஏற்கனவே கூறியது போன்று அவர்கள் காதிர் ஷஹீதின் தாயார் ஆவார்கள். அவர்களது மகன்கள் இறைவனுக்காக அர்ப்பணமாகி விட வேண்டும் என்பது அவர்களது விருப்பமாக இருந்தது. இரண்டு மகன்கள் அவர்களுக்கு இருந்தார்கள். காதிர் ஷஹீது தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். ஷஹாதத்தின் உயர் தகுதியையும் அவர் பெற்றார். இவர்களுக்கு காதிர் ஷஹீதின் மீது அதிகமான அன்பு இருந்தது. வீட்டில் பல இடங்களில் ஷஹீதின் புகைப்படத்தை இவர்கள் தொங்க விட்டிருந்தார்கள். இவரது பொறுமை பற்றியும் தைரியமாக செயல்படுவது பற்றியும் நான் கூறியிருந்தேன். காதிர் ஷஹீதின் ஜனாஸா எடுக்கப்பட்ட சமயத்தில் கூட அழுவதற்குப் பதிலாக அவர்களது நாவில் ஜஸாக்கல்லாஹ் காதிர். ஜஸாக்கல்லாஹ் காதிர் என்ற சொற்களே இருந்தன. அதாவது அவர்களது மகன் காதிர் அவர்களுக்கு மிகப்பெரிய தகுதியை வழங்கி விட்டார். அதன் காரணமாக அவர் ஷஹீதின் தாயார் என்று அழைக்கப்பட்டார். அவர்களது விருப்பம் நிறைவேறியது. அல்லாஹ் இவர்களை மன்னித்து இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களது தகுதியை உயர்த்துவானாக! இவர்களது கணவரான மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா மிர்ஸா மஜீது அஹ்மது சாஹிப் அவர்களும் நோய்வாய்ப்பட்டுள்ளார்கள். முதியவராக இருக்கின்றார்கள். அல்லாஹ் இவருக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! இவர்களது சந்ததிகளுக்கு இவர்களது நன்மைகளை தொடர்ந்து நீடித்திருக்கும்படி செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இன்னொரு ஜனாஸா பாவல்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த சவுத்ரி நஸீர் அஹ்மது சாஹிப் உடையதாகும். சவுத்ரி நஸீர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹோஸ்யார்பூரில் வசித்து வந்த சவுத்ரி நூர் முஹம்மது சாஹிபுடைய மகனாவார்கள். 1933 ஆம் ஆண்டு இவர்கள் பிறந்தார்கள். ஆகஸ்டு 28ம் தேதி அவர்கள் வஃபாத்தானார்கள். B.Sc. Civil Engineering படித்த பிறகு நீர்ப்பாசனத் துறையில் இவர் பணிபுரிந்து வந்தார். அங்கிருந்தவாறே ஓய்வு பெற்றார். அல்லாஹ்வின் அருளால் 1965 முதல் 1967 ஆம் ஆண்டு வரை ரஹீம்யார் மாவட்டத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆகவும், 1983 முதல் 2004 ஆம் ஆண்டு வரை பாவல்பூர் மாவட்டத்தின் தலைவராகவும், ஜமாஅத்தின் அமீராகவும் தொண்டு செய்வதற்குரிய நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. 2004

ஆம் ஆண்டு இவர்கள் ஹிஜ்ரத் செய்து ரப்வா வந்து விட்டார்கள். 1974 ஆம் ஆண்டு எதிரிகளின் எதிர்ப்பையும் இவர்கள் சந்திக்க நேர்ந்தது. இவர்களது டைரியன் ஒரு பக்கத்தில் இவர்கள் எழுதுகின்றார்கள்.

1974 ஆம் ஆண்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக பாகிஸ்தான் முழுவதும் கடுமையான எதிர்ப்பு ஆரம்பமானது. அந்த நாட்கள் நான் பாவல்பூரின் எனது தம்பி பஷீர் சாஹிபின் பெட்ரோல் பங்க்கை கண்கானித்து வந்தேன். ஏனென்றால் பஷீர் சாஹிப் இரத்த அழுத்தத்தின் காரணமாக உடல்நலமின்றி இருந்தார்கள். 1974ல் நிலவிய குழப்பங்களின் காரணமாக மவ்லவிமார்கள் மக்களை தடுத்தனர். எவரையும் பெட்ரோல் பங்கிற்கு அருகில் வரவிடவில்லை. பெட்ரோல் பங்கிற்குச் செல்லும் வழியில் கஃபன் அணிந்துள்ள இளைஞர்களை நிறுத்தி வைத்திருந்தனர். அங்கு ஓர் அஹ்மதி இளைஞர் பெட்ரோல் போடுவதற்காக வந்த சமயத்தில் அவரது மோட்டார் சைக்கிளை வாங்கி அதை எரித்து விட்டார்கள். இவர்கள் மீதும் அதிகமாக அநீதியிழைக்கப்பட்டது. இவர்கள் மீது எண்ணெயை வீசினர்; ஏசிப் பேசினர். இவர் மீது கொடுமையிழைக்கப்பட்டது. இப்படிப்பட்ட துன்பங்களை சகித்துக் கொள்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் இவர்களுக்கு வழங்கினான்.

இவர்களது மனைவி எழுதுகின்றார்கள்: இறுதி நேரம் வரை ஜமாஅத்தின் தொண்டுகளை இவர்கள் செய்து வந்தார்கள். கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்திலும் கடைசியாக கஸா துறையில் இவர்கள் காஸி ஆக நியமிக்கப்பட்டிருந்தார்கள். கஸாவின் தீர்ப்பை இறுதியாக அவர்கள் எழுதி அதை நூல் வைத்து தைத்து என்னிடம் தந்தார்கள். யாரும் இதை படிக்கக் கூடாது. கஸா அலுவலகத்திற்கு இதை அனுப்பி விட வேண்டும் என்று கூறினார்கள். இறுதியாக நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்தில் அதிகமாக அவர்களுக்கு கஷ்டம் இருந்தது. பேசுவது சிரமமாக இருந்தது. அப்போது நான் அவர்களிடம் அதிகமாக நோயால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். எனவே, என்னால் பணிகளைச் செய்ய முடியாது என்று ஹஸ்ரத் சாஹிபிற்கு எழுதி விடுங்கள் என்று நான் கூறினேன். அதற்கு அவர்கள் இறுதி மூச்சு உள்ளவரை இந்தப் பணிகளை செய்து கொண்டிருப்பேன் என்று கூறினார்கள்.

இவர்கள் பல்வேறு சிறப்புக் குணங்களை உடையவராகத் திகழ்ந்தார்கள். அல்லாஹ் இவர்களது தகுதியை உயர்த்துவானாக! இவர்களது சந்ததிகளை நன்மைகளில் முன்னேறிச் செல்ல வைப்பானாக!

இறுதியாக நான் அறிவிக்கும் ஜனாஸா சிரியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய பராஸ் மஹ்மூது சாஹிப் உடையதாகும். டமாஸ்கஸில் உள்ள கிராமப்புறப் பகுதிகளில் அங்கு நிலவும் கலவரம் காரணமாக இவரது ஷஹாதத் நிகழ்ந்துள்ளது. முதலில் இவரது சடலத்தைப் பற்றி தெரியாமல் இருந்தது. இவரது சடலம் ஆகஸ்டு 30ம் தேதி கிடைத்தது. அவரை நல்லடக்கம் செய்ய முயற்சி செய்யும் சமயத்தில் புதைக்கப்படும் இடம் கற்களால் நிரம்பி இருந்ததால் அந்த நிலத்தை தோண்ட முடியவில்லை. மறுநாள் அங்கு வசித்து வந்தவர்கள் இந்த கலவர சமயத்தின் ஷஹீதானவர்களை அடக்கம் செய்தார்கள். இவர்கள் எட்டு மாதங்களுக்கு முன்னர் பைஅத் செய்திருந்தார்கள். இவருக்கு வயது 35. கூலி வேலை செய்து எட்டு மாதங்களாக மிகுந்த பற்றுடன் இவர்கள் அஹ்மதிய்யத்துடன் உள்ள தொடர்பை பேணி வந்தார்கள். அல்லாஹ் இவர்களது தகுதியை உயர்த்துவானாக! இவரோடு மக்ஃபித்துடன் நடந்து கொள்வானாக!

நான் ஏற்கனவே கூறியது போன்று இவர்கள் அனைவரு ஜனாஸா காயிப் தொழுகை ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நடைபெறும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT HADEEQATUL MAHDI, ALTON, LONDON.

**ON 07.09.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456